Registered as a Newspaper

இன்று முதல்
குதூகல ஆரம்பம்
ஆர்த்தி
ஜுவலர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
கம்யூட்டர் முறையில் வர்ண புகைப் படங்கள் பிரதி செய்யப்படுகிறது.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

இன்று முதல்
நவீன பாணியில் செயல்படுகின்றது.
* கம்யூட்டர் முறையில் வர்ண பிரதிபண்ணல்
* தரமான வர்ண புகைப்பட பிரதிகள்
* கடுகதி சேவை
ஆர்த்தி
ஜுவலர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மலர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ பங்குனி மீ 4 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 5 (17-03-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:102

இந்தியாவிலிருந்து

## ஓர் அகதியாவது தலைமன்னார் வரவில்லை

### அதிகாரிகள் தினமும் வந்து காத்து திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 17

இலங்கை அரசாங்கத்தின் சலுகையை ஏற்று, இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் ஒருவராவது நேற்றுவரை தலைமன்னார் வரவில்லை.

அதிகாரிகள் மட்டும் கடந்த இரண்டு தினங்களாகத் தப்பாது, இறங்குதுறையில் வந்து காத்து நின்றுவிட்டுத் திரும்புகிறார்கள்.

கடந்த சனிக்கிழமை முதல் தலைமன்னார் இறங்குதுறையில் தினமும் அரச அதிகாரிகள் கூட்டத்தைக் காணமுடிகிறது.

படகுகளில் தமிழ் அகதிகள் வருகிறார்களா? என்று பார்த்து வரவேற்கவே இந்த அதிகாரிகள் குழு தினமும் தலைமன்னார் இறங்குதுறைக்குச் செல்கிறது.

காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இலங்கைத் தமிழ் அகதிகள் திரும்பி வரலாம் என்ற அமைச்சர் அத்துலத் முதலியின் அறிவிப்பைத் தொடர்ந்தே இந்தத் தடபுடலான வரவேற்பு ஏற்பாடு.

ஆனால் நேற்றுவரை ஒருவரும் தலைமன்னார் திரும்பவில்லை.

முச்சந்தி முனி



காத்து வாங்கப் போய் கவிதை வாங்கி வந்த கவிஞனைப் போலே, உந்த அதிகாரிகளும் கடலைப் பார்க்கப் போய் காத்து வாங்கி வருகினமே பின்னை. !

### 29 அகதிகள் ராமேஸ்வரம் சென்றனர்

ராமேஸ்வரம், மார்ச் 17

கடந்த வெள்ளிக்கிழமையும் இலங்கையில் இருந்து 29 தமிழ் அகதிகள் ராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர்.

அடகு வைத்தோர் மீண்டும் 'போர்'!

## மக்கள் வங்கி கிளைகள் முன் இன்று முதல் மறியல்

— உதயன் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம் —

நல்லூர், மார்ச் 17

அடகு வைத்தோர் சங்கம் இன்று முதல் வடபிராந்திய மக்கள் வங்கி அலுவலகம் உட்பட சகல மக்கள் வங்கிக் கிளைகளின் முன்னாலும் மீண்டும் மறியல் போராட்டம் நடத்தும்.

மக்கள்வங்கி, நகைகளை கொழும்பில்வைத்து மீளளிப்பது சம்பந்தமான கூட்டம் ஒன்று நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடந்தது.

பல்கலைக்கழக மாணவர் அவையின் அனுசரணையுடன் நடந்த இக் கூட்டத்துக்குச் சங்கத் தலைவர் திரு. ஏ அரசரத்தினம் தலைமை வகித்தார்.

பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் இக் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்த நகைகள் மீண்டும் வடபகுதியிலேயே வழங்கப்படவேண்டும் எனக் கோரியே இம்மறியல் போராட்டம் நடத்தப்பட இருக்கிறது.

இன்று திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 7 30 மணி தொடக்கம் 9 30 மணி வரை தினமும் இரண்டு மணித்தியாலம் மறியல் போராட்டம் நடைபெறும்.

போராட்டம் வெற்றி அளிக்கத் தவறினால் யாழ் செயலகம், இலங்கை வங்கி ஆகியவற்றின் முன்பாகவும் மறியல் போராட்டம் விஸ்தரிக்கப்படும்.

இப் போராட்டத்துக்கென மக்கள் வங்கிக்கிளை (4 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியாவை உண்ண விரும்பும் 'கரடி'

லண்டன், மார்ச் 16

'இந்தியாவை இரவு உணவாகச் சாப்பிட விரும்புகின்றோம்'—

இப்படி ஒரு அட்டையைத் தூக்கிய கரடி முகமூடி அணிந்த ஒருவரும் இந்திய தூதரகத்தின் முன்னால் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்.

லண்டனில் இந்தியத் தூதரகம் முன்னால் சிங்களவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

### பேராதனை செல்ல மாணவருக்கு பஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 17

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர் செல்வதற்கென மார்ச் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 6 மணியளவில் யாழ் பஸ் நிலையத்தில் இருந்து பஸ் ஒன்று புறப்படும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான போக்குவரத்து வசதிகளைச் செய்யுமுகமாக மாணவர்களை இன்று (17 - 3 - 86) காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக அலுவலக முன்றலில் கூடும்படி கேட்கப்பட்டுள்ளது.

## வட்டக்கச்சியில் நால்வர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 17

4 பேர் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானார்கள். 2பேர் காயமடைந்தனர்.

கிளிநொச்சியில், வட்டக்கச்சி தென்னம் நாற்றுப் பண்ணைக்கு அருகில் நடந்த சம்பவம் ஒன்றில் இது இடம்பெற்றது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:

டிராக்டரில் ஆறுபேர் சென்று கொண்டிருந்தனர்.

வட்டக்கச்சியை நெருங்கிய சமயம் மற்றொரு டிராக்டரில் வந்த சீருடையினர் டிராக்டரில் வந்தவர்களுடன் மோதினராம்.

அப்போது டிராக்டரில் இருந்தவர்களில் 4 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி மரணமானார்கள். இரண்டுபேர் காயம் அடைந்தனர்.

சீருடையினரில் ஒருவருக்குக் காயம் ஏற்பட்டது.

இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் சீருடையினர் லொறியில் கொண்டு சென்று விட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

தமிழீழ ஆதரவாளர் அமைப்பு சொல்கிறது

## இந்திய மண்ணில் இனியும் பேச்சுக்கு இடம் கொடாதீர்!

### போராளிகளுக்கு உதவ தமிழகத்திலிருந்து படை

சென்னை, மார்ச் 16

இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் நாளாந்தம் இராணுவத்தினரால் கொலை செய்யப்படுகிறார்கள். அப்படியிருக்கும் போது, இந்திய மண்ணில் வைத்துப் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை அரசை இனி அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு தமிழீழ ஆதரவாளர் அமைப்பு சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தலைமையிலான இந்த அமைப்பின் இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திரு லலித் அத்துலத் முதலியின் ஒரு வார போர் நிறுத்தம் என்பது தனது படைகளை தயார் நிலையில் வைப்பதற்கு எடுத்துக் கொண்ட ஒரு சூழ்ச்சியாகும். வடக்கு, கிழக்கு மகாணங்களிலுள்ள தமிழ்மக்கள் தொடர்ந்தும் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டும் பெண்கள் கற்பழிக்கப்பட்டும் வருகிறார்கள்

போராளிகளின் செயற்பாடு இலங்கையில் இல்லாது போனால் இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசம் இன்று எலும்புக் கூடுகளின் கூடமாகியிருக்கும்.

தமிழ்ப் போராளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து மற்றவர்களை நம்பியிராது தமது சொந்தக் காலில் நின்று போராட வேண்டும் என்பதே எமது விருப்பம்.

இலங்கை அரசு இன்னமும் நவீன விமானங்களையும் ஆயுதங்களையும் குவிப்பதிலேயே அக்கறை காட்டுகிறது. தமிழ் மக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

நெல் அறுவடை செய்துகொண்டிருந்தோம்

## டிராக்டரில் வந்த சிப்பாய்கள் சுட்டபோது காலில் காயம் ஏற்பட்டது

### உயிர் தப்பியவர் தகவல்

நல்லூர், மார்ச் 17

டிராக்டரில் வந்த சிப்பாய்கள் டிராக்டரில் வந்த இளைஞர்களை துரத்திச் சுட்டனர். இதனால் எனக்கு காலில் காயம் ஏற்பட்டது.

நேற்று வட்டக்கச்சி இராசையா கமப்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த சந்தனம் தோமஸ் ராஜேந்திரன் (26 வயது) என்பவர் மேற்கண்டவாறு (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலோலி தெற்கில் ரூபா 5 லட்சம் நகை, பணம் கொள்ளை

### பொதுமக்கள் வீதித் தடை

பருத்தித்துறை, மார்ச் 17

புலோலி தெற்கு உபய கதிர்காமம் இராமத்திலுள்ள வீடொன்றில் துப்பாக்கி முனையில் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டன.

இச் சம்பவம் சனிக்கிழமை நள்ளிரவு நடந்தது. சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

புலோலி தெற்கைச் சேர்ந்த திரு. குணவர்த்தனம் சுந்தரேஸ்வரன் என்பவரின் வீட்டுக்கு நள்ளிரவு 12 45 மணி அளவில் பயங்கர ஆயுதங்களுடன் வான் ஒன்றில் சுமார் 20 பேர் வந்தனர்.

இவர்கள் பிரதான வீதியிலிருந்து இவரது வீடு வரை தங்களது கோஷ்டியினரை காவலுக்கு நிறுத்திவிட்டு சுமார் பத்துப் பேர் வீட்டினுள் மதிலால் பாய்ந்து சென்றனர்.

வீட்டின் முன்புறக் கதவைத் தட்டி, "புஹாரி (4ஆம் பக்கம் பார்க்க)

பரந்தன் ரயில் விபத்து

## ஒருவரின் சடலம் அடையாளம் காணப்பட்டது

கிளிநொச்சி, மார்ச் 17

பரந்தன் ரயில் விபத்தில் மரணமானோரில் இருவரின் சடலங்கள் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

இந்த சடலங்களில் ஒன்று வவுனியாவைச் சேர்ந்த திருக்குமாருடையது என்று அடையாளம் காணப்பட்டது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை பரந்தனில் இராணுவத் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான வெள்ளைச்சாமி தினகரநாதன் என்ற 23 வயது இளைஞரது சடலமும் இதுவரை பிரேத பரிசோதனை செய்யப்படாத நிலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக டாக்டர்கள் இல்லாததால் சடலம் துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளதால், ரயில் விபத்தில் இறந்தவரை அடையாளம் காண்பதற்காக பொதுமக்கள் பிரேத அறைக்குச் செல்ல முடியாதுள்ளதாம்.

### காயமடைந்த மற்றும் இருவர்

நல்லூர், மார்ச் 17

நேற்று முன்தினம் பரந்தனில் நடைபெற்ற ரயில் விபத்தில்போது காயமடைந்த மேலும் இருவர் நேற்று யாழ். வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர்.

பெயர் விவரம் வருமாறு:-

அன்ரன் பிரான்சிஸ், 39 வயது, ஆனைக்கோட்டை.

எஸ். ஜெயக்குமார், 32 வயது, சுன்னாகம்.

சுபநேரம்
17- 3- 1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.20 முதல் 1 50 வரை
ராகுகாலம்:
7.50 முதல் 9 26 வரை
இலை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## அமைச்சரவை: மாற்றம் வரலாம்

### ஆனால் ஆள் மாற்றம் இராது

கொழும்பு, மார்ச் 17

அமைச்சரவையில் பெரிய மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

அமைச்சுக்கள் மாற்றப்படலாம்; ஆட்கள் மாற்றப்படமாட்டார்கள்.

இப்படி கொழும்பு வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சராக திரு. ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படலாம் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் பொறுப்பில் உள்ள பல அமைச்சுக்களும் சக அமைச்சர்களிடம் பகிர்ந்தளிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

திரு. காமினி ஜயசூரியா பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சையும் ஏற்பார் என்று (4 ஆம் பக்கம் பார்க்க)

### 6 சிப்பாய்கள் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று மாலை நடத்திய தாக்குதலில் ஆறு சிப்பாய்கள் இறந்தனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் சுமார் 35 சிப்பாய்கள் படுத்திருந்தவாறு பதுங்கி இருந்தபோது இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்று இதனைத் தெரிவிக்கிறது.

முகாமிலிருந்து சிப்பாய்கள் வெளியேறியபோது

## வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொலை

### ஷெல் தாக்குதலால் 2 வீடுகள் சேதம்

பலாலி, மார்ச் 17

தொண்டமனாறு இராணுவ முகாமில் இருந்து பலாலி இராணுவ முகாமை நோக்கி வந்த சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு வயோதிபர் மரணம் அடைந்தார். இரு வீடுகள் சேதம் அடைந்தன.

— பலாலி செய்தியாளர் சே. எஸ். ராஜா —

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்றுக் காலை 7 மணி அளவில் தொண்டமனாறு இராணுவ முகாமில் இருந்து சுமார் 200 சிப்பாய்கள் பலாலி இராணுவ முகாமை நோக்கி புறப்பட்டனர்.

கடற்கரை வழியாகவும் கடற்கரை வீதி ஓரமாகவும் சுட்டுக்கொண்டே அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

அப்படிச் சுட்டபோது வயோதிபர் ஒருவர் மர (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று ஹர்த்தால்

### சிப்பாய்கள் சுட்டு இருவர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 17

நேற்று வவுனியாவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஒரு மாதத்துக்கு முன்னர் இயக்க இளைஞர்கள் மூவர் சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு நினைவஞ்சலியாக இது ஏற்பாடு செய்யப்பட்டது.

கடைகள் பூட்டி இருக்கக் காணப்பட்டன. போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்தது.

காலையில் குண்டு வெடிப்புகளும் இடம்பெற்றன. இதை அடுத்து சிப்பாய்கள் வவுனியா முகாமிலிருந்து வெளிவந்து நடை பவனியாகவும் வாகனத்திலும் தாண்டிக்குளம் பகுதிக்குச் சென்றனர்.

அங்கிருந்து திரும்புகையில் சிப்பாய்கள் இருவரைச் சுட்டனர்.

கோவிந்தன் செல்வம் என்ற 2 பிள்ளைகளின் தந்தையும் (வயது 27) எஸ் லோகேஸ்வரன் என்பவரும் (வயது 14) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள்.

இவர்கள் உடனடியாக (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் நடிகர் ரவியின் திரையுலகப் பிரவேசம்

நடிகை விஜயகுமாரியின் மகன் ரவி இருபத்து நான்கு வயதுடையவர். ஒரு பி.ஏ. பட்டதாரி.

ஒருநாள் நடிகை விஜயகுமாரியின் வீட்டில் ஷூட்டிங் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தயாரிப்பாளர் திருமாலும், டைரக்டர் விஜயசிங்கமும் ஷூட்டிங்கின் இடையில் அந்த இளைஞரின் கம்பீர தோற்றத்தைப் பார்த்து இருவரும் ஏதோ சமிக்ஞையில் பேசிக் கொண்டனர்.

''தம்பி எங்க படத்திலே நடிக்கிறீங்களா''?

ரவியின் செவியில் தேனை ஒலித்தது திருமாலின் அந்தக் கேள்வி

வீட்டின் உள்ளே இருந்த தாயாரின் அனுமதி பெற்று உடனே ''ஓகே'' சொல்லி விட்டார் ரவி. படப்பிடிப்பும் சிரமம் இல்லாமல் அவர் வீட்டிலேயே நடந்தது.

பெயரிடப்படாத இப்படத்தில் ரவியின் ஜோடி விஜி.

ஏற்றுமதி வியாபாரம் செய்து வரும் ரவிக்கு தயாரிப்பாளர் திருமாலைச் சந்தித்த நேரம் ஒரு மலையாளப் படத்திலும் வாய்ப்புக் கிடைத்துள்ளது

படத்தின் பெயர் உத்திரிப் பூக்கள்—இத்திரிப் பூக்கள். ஜோடியாக இணைபவர் சிலுக்கு சுமிதா.

ஒரு வயதான பெண்ணைக் காதலிக்கும் இளைஞர் வேடம் ரவிக்கு.

''நடிப்பில் வெகு விரைவில் புகழ் அடைந்து வெற்றிக் கொடி நாட்டுவேன்'' என்று நம்பிக்கையோடு கூறினார் ரவி.

### மாதுரியின் அதிஷ்டம்

நடிகை வடிவுக்கரசி தயாரிக்கும் ''அன்னை என் தெய்வம்'' படத்தில் விஜயகாந்தின் ஜோடியாக நடிக்க ராதிகா ஒப்பந்தமாகி இருந்தார்.

கால்ஷீட் பிரச்சினை காரணமாக ராதிகாவினால் நடிக்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

அதிஷ்டம் அடித்தது மாதுரிக்கு!

விஜயகாந்தின் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகி விட்டார் மாதுரி.

## பத்திரிகையாளர் வெளியேற்றப்பட்டார்

ஜகார்த்தா, மார்ச் 16

அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவரை நாட்டை விட்டு வெளியேறும்படி இந்தோனேஷிய அரசு கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது

''பார் ஈஸ்டர்ன் இகொனமிக் ரிவியூ'' பத்திரிகையாளரான திரு.கேய் என்பவரே வெளியேற்ற உத்தரவுக்கு ஆளானவர்

இந்தோனேஷிய அரசுக்கு அவமரியாதை ஏற்படும் விதத்தில் இப்பத்திரிகையாளர் கட்டுரைகளை எழுதினார் என்பதே வெளியேற்ற உத்தரவுக்குக் காரணம் என்று இந்தோனேஷிய அரசு கூறியது

சிங்கப்பூரில் ஆறு மாடி ஹோட்டல் இடிந்து விழுந்தது

# 500 துருப்பினர் இடிபாடுகளிடையே தேடுதல்

சிங்கப்பூர், மார்ச் 16

சிங்கப்பூரில் இந்திய நாட்டவர் பெரும் அளவு குடியிருக்கும் பகுதியில் உள்ள 6 மாடிஹோட்டல் ஒன்று இடிந்து விழுந்தது.

இடிபாடுகளிடையே சிக்கி இருப்பவர்களை மீட்கும் முயற்சியில் 500 துருப்பினர்களும் தியணைக்கும்படையினரும் இரவுபகலாக ஈடுபட்டுவருகின்றனர்.

இந்திய மலேசிய உல்லாசப் பிரயாணிகள் பெரும்பாலும் இந்த ஹோட்டலிலேயே தங்குவது வழக்கம்.

ஹோட்டல் இடிந்து விழுந்ததற்கான காரணம் உடனடியாகத்தெரிவிக்கப்படவில்லை.

இதுதொடர்பான அதிகாரபூர்வ விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செய்தி அச்சுக்குப் போகும்வரை அறுவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

46 ஹோட்டல் ஊழியர்கள் உட்பட 56 பேரைக் காணவில்லை.

## செஞ்சிலுவைச் சங்கம் தமிழ் அகதிகளுக்கு உதவ அனுமதிக்குக!

### கூட்டணி கோரிக்கை

சென்னை, மார்ச் 16

இலங்கையில் தமிழ் அகதிகளுக்கு உதவ செஞ்சிலுவைச் சங்கத்தை அனுமதிக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கூட்டணியின் பொலிற்பீரோ இது சப்பந்தமாக வேண்டுகோளை விடுத்தது.

ராணுவ நடவடிக்கையினால் தமிழ் மீனவர்கள், விவசாயிகள் தொழில் இழந்து அவஸ்தைப்படுகின்றனர்.

இந்த ரீதியில் சர்வதேச ஸ்தாபனங்களை தமிழ் அகதிகளுக்கு உதவி செய்ய இலங்கை அரசு அனுமதியளிக்கவேண்டும்.'' — இப்படிக் கோரப்பட்டுள்ளது

### நிக்கரகுவாவுக்கு இந்தியா ஆதரவு

புதுடில்லி, மார்ச் 16

நிக்கரகுவா அரசாங்கத்துக்கு இந்தியா தனது ஆதரவை மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

வெளிநாட்டுத் தலையீடு எதுவும். நிக்கராகுவாவில் இருக்கக்கூடாது என்றும் இந்தியா கூறியுள்ளது

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பலிராம் பகத் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

## அமெரிக்க சோவியத் பிரதிநிதிகள் மனம் திறந்து பேசினர்

ஸ்டொக்ஹோம், மார்ச் 16

அமெரிக்க வெளிநாட்டு அமைச்சரும் சோவியத் பிரதம மந்திரியும் ஒளிவு மறைவு இன்றி பேச்சுக்கள் நடத்தினர்.

சுவீடிஷ் பிரதமராக இருந்து கொல்லப்பட்ட ஒலப் பாமே - யின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ள வந்த இடத்தில் இரண்டு அமைச்சர்களும் இப்பேச்சுக்களை நடத்தினர்.

கடந்த ஆண்டு ஜெனிவாவில்-அமெரிக்க சோவியத் தலைவர்களுக்கு இடையே நடந்த உச்சி மாநாட்டின் பின்னர் நடைபெற்ற அமெரிக்க சோவியத் உயர்மட்டப் பேச்சாக இது இருந்தது என்று அறிவிக்கப்படுகிறது

இரண்டு தலைவர்களினதும் அடுத்தஉச்சி மாநாடு எப்போது? என்பதுபற்றியும் அணு ஆயுதப் பரிகரணக்கொள்கை முதலியன பற்றியும் இப்பேச்சுக்களின்போது முடிவுகள் எடுக்கப்படவில்லை

பேச்சுக்கள் மனம் திறந்து நடந்தாலும் முன்னேற்றகரமானதாக இல்லை என்றும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

சுவீடனின் மறைந்த பிரதமரின் இறுதிச்சடங்குகளில் 121 நாடுகளின் தலைவர்கள். பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அன்னை இந்திரா போன்று சமாதானத்துக்காகவும் ஆயுதப்பரிகரணத்துக்காகவும் போராடி கொலைக்காரனின்குண்டுகளுக்கு இரையானவர் மறைந்த பிரதமர் பாமே என்று இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி இறுதிச் சடங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்

பலத்த பாதுகாப்புக்களின் மத்தியில் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

மறைந்த பிரதமர் பாமேயின் கொலை பற்றிய மர்மம் இன்னும் நீடிக்கின்றது.

# வெளி உலகில்

## பலஸ்தீன விடுதலை இயக்கம் முதலில் இஸ்ரவேலை அங்கீகரிக்க வேண்டும் என்கிறார் ஸியா

பஹ்மா, மார்ச் 16

பலஸ்தீன விடுதலை இயக்கம் முதலில் இஸ்ரவேல் நாட்டை அங்கீகரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் பின்னர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்க வேண்டும்.

அப்படிச் செய்வதன் மூலம் உருவாகும் நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் பலஸ்தீனப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

இப்படி பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல்ஹக் டெஹ்ரான் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டிஒன்றில் தெரிவித்து இருக்கின்றார்.

பேட்டியில் ஜனாதிபதி ஸியா மேலும் சொன்னதாவது:

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தை பாகிஸ்தான் ஒருபோதும் அங்கீகரியாது.

இந்து சமுத்திரத்தில் காலூன்றவும்,

பாகிஸ்தானூடாக ஈரானில் நுழையவுமே ரஷ்யா ஆப்கானிஸ்தானில் காலூன்றியுள்ளது.

இந்தியாவுடனை பாகிஸ்தான் உறவு நல்ல நிலையில் உள்ளது.

திருமதி இந்திராகாந்தியின் ஆட்சிக் காலத்திலும் பார்க்க திரு.ராஜீவ் காந்தியின் காலத்தில் உறவு சீரடைந்து வருகின்றது

இப்படி ஜனாதிபதி ஸியா உல் ஹக் சொன்னார்.

### வெளியேற்ற முடிவுக்கு எதிர்ப்பு

ஜெனீவா, மார்ச் 16

சுமார் 280 தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்து சுவிஸ் நாட்டில் உள்ள பொது நல அமைப்புக்கள் வருத்தம் தெரிவித்துள்ளன.

ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கும் ஐநா மனித உரிமை ஆணைக்குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் சுவிஸ் பிரதிநிதிகளிடம் இந்த அமைப்புக்கள் தங்கள் வருத்தத்தை வெளியிட்டன.

### தீவிரவாதிகளுக்கு பிஸ்டல்

பொன், மார்ச் 16

ஆஸ்திரியாவில் தயாரிக்கப்பட்ட 100 பிஸ்டல்களை அபுநிதால் தீவிரவாதிகளுக்காக லிபியத் தலைவர் கேர்னல் முவாம்மர் கடாபி வரவழைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

விமான நிலையங்களில் இந்தப் பிஸ்டல்களை இலகுவில் கண்டு பிடிக்க முடியாது என்று கூறப்படுகிறது.

### ஆர்ப்பாட்டம்

கோலாலம்பூர், மார்ச் 16

மலேஷியாவின் மாநிலத்தில் ஆட்சி நடத்துபவர்களிடம் கிறிஸ்தவ ஆதிக்கம் வலுப்பெற்று வருவதை ஆட்சேபித்து கடந்த வெள்ளிக்கிழமை 100க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 17

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு கா சந்திரபாலன் தலைமையில் நடைபெறும்.

தஷ்ப்ரு எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி. ம. திருச்சிற்றம்பலம் சிறப்பு விருந்தினராக பங்குபற்றுவார்.

### டயர்கள் மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 17

மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவிலிருந்து கடந்த 5ஆம் திகதி கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படும் பெருந்தொகையான டயர்கள் சிறுடையினரால் கண்டு பிடிக்கப்பட்டன.

நாவலடிக் கிராமத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த குடிசை ஒன்றில் இந்த டயர்களைக் கடற்படையினர் கண்டுபிடித்தனர்.


### விற்பனைக்கு

அக்ஷய வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. விலை ரூபா 16. வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு கிடைக்குமிடம்: சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

### திட்டப் பரிசு

எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருவாய்கள், மாதாந்த அதிஷ்டம், குதுவானாலும், திருமணமானாலும், பிரசவமானாலும், விபத்தானாலும், அந்தியகாலமானாலும், கடன் வசதிகளும் ஏராளமான நன்கொடைகளும் ஒருங்கேயமைந்த திட்டமிது. மேலும் விபரங்களுக்கு பிரதம இயக்குநர், லக்கி ஒபனிங் கோ. லிமிட்டெட், கோப்பாய்


# மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# மீன் வாங்கி வருவதாக கூறிச் சென்றார் கணவர்

## செய்தியாளர் மரண விசாரணையில் மனைவி

மட்டக்களப்பு, மார்ச் 17

சம்பவதினம் எனது கணவர் மீன் வாங்கப் புறப்பட்டார் மீன் கிடைக்காவிடில் கடலில் பிடித்து வருவதாகக் கூறிச் சென்றார்.

கல்லடி ஆயுதப்படை முகாமில் நடந்த விசாரணையின்போது திருமதி திலகாஇரத்தின சிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சமீபத்தில் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வீரகேசரி வவுணதீவு செய்தியாளர் கே.எஸ் இரத்தினசிங்கத்தின் மனைவி இவர்.

இக்கொலை தொடர்பாக ஜனாதிபதிக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இந்த விசாரணை நடத்தப்பட்டது

ஏ. எஸ். பி. டிக்ஸின் சில்வா முன்னிலையில் விசாரணை நடந்தது.

திருமதி திலகா இரத்தினசிங்கம் தனது ஆறு மாதக் குழந்தையுடன் விசாரணைக்கு வந்திருந்தார்.

இச்சம்பவத்தில் இறந்த தங்கவேலு என்ற இளைஞனின் தந்தை மா. மாணிக்கம், ராஜநாயகம் என்ற இளைஞனின் தாயார் எஸ். செல்லம்மா ஆகியோரும் விசாரணைக்கு வந்திருந்தனர்.

காந்தி சேவா சங்கச் செயலாளர் திரு. க. பாரதிதாசன் இவர்களை கல்லடி இராணுவ முகாமுக்கு அழைதது்ச் சென்றார்.

இன்று திங்கட்கிழமை வரைவிசாரணை ஒத்தி வைக்கப்பட்டது

## மடுவில் அகதிகள்

மன்னார்,மார்ச் 17

அண்மையில் வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம், ஆலங்குளம், எண்ணூட்டி, அகத்தி முறிப்பு, ஆகிய கிராமங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக மொத்தம் 148 குடும்பங்களைச் சேர்ந்த 836பேர் இடம் பெயர்ந்து மடுப்பகுதியிலுள்ள அகதி முகாமில் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

இவர்களில் 555 சிறுவர்கள் 12 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

இவர்களுக்கு உதவு முகமாக மன்னார் மாவட்ட சர்வோதய இணைப்பதிகாரி உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் கொண்ட பொதிகளை மன்னார் அரசாங்க அதிபர் ஊடாக மடு அகதி முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளார்

## புதிய அலுவலகம்

சாவகச்சேரி, மார்ச் 17

சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளை தற்போது இயங்கிவரும் கட்டட வசதிக்குறைவுகளை முன்னிட்டு இன்று 17ம் திகதி முதல் நவீனசந்தையின் மேல்மாடியில் இயங்க இருக்கிறது.

இன்றைய தினம் மு.ப 9.00 மணிக்கு புதிய அலுவலகத்தை பிரா... திய முகாமையாளர் திரு எஸ்.கணேசலிங்கம் திறந்து வைப்பார்.

## மீண்டும் வெரிதாஸ்

மட்டக்களப்பு, மார்ச்.17

தடைப்பட்டுள்ள வெரிதாஸ் வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகள் மீண்டும் நாளை–18 முதல் ஆரம்பமாக உள்ளன.

காலை 6 மணி ஒலிபரப்பு சிற்றலை, 25 மீட்டரிலும்—

மாலை 7 30 மணி ஒலி பரப்பு சிற்றலை 31 மீட்டரிலும் இடம் பெறும்.

இத்தகவல்களை தமிழ் ஒலி வானொலி நேயர் மன்றச் செயலாளர் திரு. எஸ் உமாகாந்தன் தெரிவித்தார்.

## பொறியியலாளரின் மனைவி மின்கம்பத்தில் கல்லடியில் சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 17

கட்டடப் பொறியியலாளர் ஒருவரின் மனைவி சமூகவிரோத குற்றச்சாட்டின் பேரில் மின்கம்ப மரண தண்டனைக்கு ஆளானார்.

இச்சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கல்லடியில் வெள்ளிக்கிழமை இரவு நடந்தது.

இறந்தவர் மனோகரி பஞ்சரத்தினம். வயது 38. மூன்று பிள்ளைகளின் தாயார்.

இவரது சடலம் தலையில் துப்பாக்கிச் சூட்டுடன் சிவானந்தா வித்தியாலயத்துக்குமுன் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது

மரண விசாரணையை திரு. ரி வேலுப்பிள்ளை நடத்தினார். டாக்டர் ஸ்ரீ. பஞ்சலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

இறந்த பெண்ணின் கணவன் மரணவிசாரணையில் தெரிவித்ததாவது:-

கடந்த 13ஆம் திகதி இரவு ஆயுதபாணிகளாக வந்த இனம் தெரியாத ஏழு பேர் எனது மனைவியை பலவந்தமாக அழைத்துச் சென்றனர்.

14 ஆம் திகதி காலையில் தான் விடுவிக்கப்பட்டு விட்டதாக எனது மனைவி தொலைபேசியில் என்னிடம் தெரிவித்தார். பஸ்ஸில் தான் வருவதாகவும் அவர் கூறினார்

ஆனல் அவர் வரவில்லை பின்னர் இனம் தெரியாத ஒருவர் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்தார்.

தன்னுடைய தாலிக்கொடியை கடிதம் கொண்டு வருபவரிடம் கொடுத்து விடும்படியும் —

அப்படிச் செய்தால் மட்டுமே தன்னை அவர்கள் விடுவிப்பார்கள் என்றும் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

தாலிக்கொடியை கொடுத்து அனுப்பினேன். ஆனால் மனைவி விடுவிக்கப்படவில்லை.

இப்படி அவர் சொன்னார்.

# வவுனியாவில் கைதானோர் பற்றி

## பிர. குழு. விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 17

1983 ஜூனுக்குப் பின்னர் வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரால் பலர் கைது செய்யப்பட்டனர்.

அப்படிக் கைதானவர்களில் சிலரின் கதி இன்று வரை என்னவென்று தெரியவில்லை.

அப்படிப்பட்டவர்களின் நெருங்கிய உறவினர்களை வவுனியா பிரஜைகள் குழுத் தலைவரான சட்டத்தரணி திரு என். எம். எக்ஸ். சொர்ணபாலாவுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## கைக்குண்டு வெடிக்க தவறியபோது சுட்டனர்

### முத்திரைச் சந்தை சம்பவ மரணம் குறித்து சாட்சியம்

நல்லூர், மார்ச் 17

ஊர்வலத்தை நோக்கி முதலில் கைக்குண்டு வீசப்பட்டது அது வெடிக்கத் தவறியபோது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை முத்திரைச் சந்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது பலியானவர்களின் மரணவிசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

இச் சம்பவத்தில் பலியான கரவெட்டியைச் சேர்ந்த வ. தனேஸ்வரியின் (14 வயது) மரண விசாரணையில் எஸ். யோகரஞ்சனி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மரணவிசாரணையை யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு.வ.கேசவன் நடத்தினார்

யோகரஞ்சனி சொன்னதாவது:-

யாழ். வைத்திய மனையில் இடம்பெற்ற படுகொலைகளை ஆட்சேபித்தும் கைதானவரை விடுதலை செய்யக் கோரியும் யாழ்ப்பாணத்தில் ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்காக கடந்த வியாழக்கிழமை பஸ்ஸிலும், வானிலும் யாழ்ப்பாணம் வந்தோம்.

பின்னர் பஸ்நிலையத்தில் இருந்து சுமார் 750 பேர் வரையில் ஊர்வலமாக பயித்தித்துறை வீதியால் சென்று கொண்டிருந்தோம். ஊர்வலம் முத்திரைச் சந்தையடியில் சென்று கொண்டிருந்த பொழுது முத்திரைச் சந்தை தேவாலயத்திற்கு அருகில் நின்ற இருவர் வானத்தை நோக்கிச் சுட்டனர்.

அப்பொழுது அவர்களை நாம் துரத்திச் சென்றோம் அவர்கள் ஓடிவிட்டனர்

பின்னர் சங்கிலியன் சிலையடிக்கு நாம் திரும்பி வந்த பொழுது வேறுவீதியால் வந்த இருவரும் எம்மை நோக்கி கைக்குண்டை வீசினர்.

அது வெடிக்கவில்லை. பின்னர் ஊர்வலத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் முன்வரிசையில் வந்த சிலர் காயங்கள் ஏற்பட்டு வீதியில் விழுந்தனர்.

பின்னர் காயமடைந்தவர்களை வானில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டு வீதியில் இருந்து விட்டோம்

இப்படி அவர் சொன்னார்.

தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

### வாக்கிடோக்கி ஆடர் கொடுத்தோர் கைது

கொழும்பு, மார்ச்.17

25 லட்சம் ரூபா பெறுமதியான 70 வாக்கிடோக்கி சாதனங்களை கனடாவில் இருந்து வாங்க ஆடர் கொடுத்ததாகக் கூறப்படும் மூன்று தமிழர்களை புறக்கோட்டைப் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

குமார் ரத்தினம் ஜோதி, ஜோசப் அன்ரனி, ராமமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டவர்கள்.

இவர்கள் தங்கிஇருந்த வீடு ஒன்றைச் சோதனை இட்ட பொலீஸார், மாதிரி வாக்கி டோக்கி ஒன்றையும் கைப்பற்றினராம்.


சங்கானை பல நோ. கூ. சங்கம் (வ.து.)

**மின் தறியாலையைக் குத்தகைக்கு விடுதல்**

மேற்படி சங்கத்திலுள்ள 15 மின் தறிகளை மாதாந்தக் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. இதைக் குத்தகைக்கு எடுக்க விரும்புவோர் விபரங்களுக்குச் சங்கத் தலைவரை 18 3-86ஆம் திகதி தொடக்கம் 27–3–86ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை நேரடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 27-3–86.

தலைவர்,
சங்கானை பல நோ.கூ.சங்கம்,
சங்கானை.

15–3–86.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நமது விருப்பங்கள் எல்லாவற்றையும் இறைவனது பாதங்களில் ஒப்படைத்தலே சாலச் சிறந்தது. நமக்கு எவை மிக நல்லவையோ அவற்றையே இறைவன் நமக்கு அருள்வான்.

-அன்னை சாரதாதேவியார்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24805, 22073

17-03-86

த. பெ. 23

## பரந்தன் சதி!

கடந்த சனிக்கிழமை பரந்தனில் நடந்த கோர ரயில் விபத்தில் ஐந்து பேர் கொலையுண்டனர். இறந்த பயணிகள் யாழ்தேவியில் காலடி எடுத்து வைத்தபோது தமக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கும் என நினைத்தார்களோ என்னவோ?

இலங்கை ரயில்வேப் பகுதி விபத்துகளுக்குப் பெயர் பெற்ற ஸ்தாபனம். எத்தனை விபத்துகள் நடந்து, எத்தனை நூற்றுக்கணக்கான உயிர்கள் பலி எடுக்கப்பட்டாலும் விபத்துக்களைத் தடுக்க அது உரிய நடவடிக்கை எடுத்ததாகச் சரித்திரம் இல்லை. விபத்து ஒன்று நடந்த உடனே விசாரணை, அறிக்கை நடவடிக்கை என்று ஏதேதோ எல்லாம் நடைபெறும். அவ்வளவோடு சரி.

பரந்தனில் நடந்த ரயில் விபத்து ஒரு சதி என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் அதனைக் கூறி ரயில்வே திணைக்களம் தப்பித்துக் கொள்ளத் தயாராகி விடும்.

விபத்துக்குக் காரணம் எதுவாக இருப்பினும் அது விபத்தே தான். அதற்கு ரயில்வே பகுதியே பொறுப்பு ஏற்க வேண்டும்.

பரந்தன் ரயில் நிலையத்துக்குச் சமீபமாக குண்டு ஒன்று வெடித்தது. அதனால் தண்டவாளங்கள் இருப்புக் குலைந்ததால் இந்த விபத்து ஏற்பட வேண்டியதாயிற்று. இவ்வாறு தகவல் அறிந்த வட்டாரங்கள் சொல்லுகின்றன.

தண்டவாளங்கள் கழன்று இருந்த இடத்துக்கு ரயில் வந்திருந்து விபத்து நடந்திருக்குமானால் விளைவு விபரீதமாக இருந்திருக்கும். நூற்றுக்கணக்கான பயணிகள் மடிந்திருப்பார்கள்.

ரயில் தொடர்ந்து சென்றால் ஆபத்து என்று சாரதிக்குச் சமிக்ஞை காட்டிய இளைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

திடீர் அறிவிப்புக்கு மத்தியிலும் ரயிலைக் குறிப்பிட்ட இடத்துக்குப் போக விடாமல் சாதுரியமாக நிறுத்திய சாரதி பதக்கம் அளித்து மெச்சப்பட வேண்டியவர்.

எது எப்படியிருப்பினும் ரயில்வே பாதையில் குண்டு வைத்து நாசவேலை செய்தவர்களை அவர்கள் யாராக இருந்தாலும் நாம் கண்டிக்கிறோம். மனித உயிர்களின் மதிப்புத் தெரியாத மதியிலிகள் அவர்கள். தங்களது குறுகிய நோக்கம் எதையோ அடைவதற்காக மனித உயிர்களைப் பலி எடுக்கும் முயற்சியில் இறங்கிய அவர்களின் அரக்கத்தனத்தை நாகரிக உலகில் உள்ள எவரும் கண்டித்தே ஆக வேண்டும்.

1. வடபகுதிக்கான ரயில் சேவையைச் சீர்கெடச் செய்ய வேண்டும்.

2. சமாதான வாரத் தொடக்க நாளில் இப்படி ஒரு வன்செயலை நடத்தி, அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு அந்த வாரத்தின் நடைமுறை நோக்கத்தை வேரறுக்க வேண்டும்.

மேற்கண்ட நோக்கங்களை மனதில் வைத்தே இந்தக் குண்டு வெடிப்புச் சதி நடந்திருக்கிறதோ எனச் சந்தேகப்பட வேண்டி உள்ளது.

எனவே ரயில்வேத் திணைக்களம் தனது வழமையான வெளிப்பூச்சு வேலையான விசாரணையை வைத்து குற்றவாளிகள் யார் என்பதையாவது வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே "பயங்கரவாதி"கள் தான் இதனைச் செய்தார்கள் என்று பட்டம் கட்டிவிட்டு இருந்துவிடக் கூடாது.

உண்மை என்றோ ஒரு நாள் வெளிச்சத்துக்கு வந்தே தீரும். வடக்கில் நடக்கும் எல்லா வன்செயல்களையும் போராளிகள் தான் செய்கிறார்கள் என்று கண்ணை மூடிக் கொண்டு சொல்வது தகாது.

எனவே பரந்தன் ரயில் விபத்துக்கு மூல காரணம் யார் என்பது பாரபட்சமற்ற விசாரணை மூலம் கண்டறியப்பட வேண்டும். அரசு அதனை பக்கச்சார்பின்றி செய்து காட்டுமா?

## சிவத்தம்பியும் வெளியேறினார்

நல்லூர், மார்ச்.17

வல்வெட்டித்துறையில் அண்மையில் இடம் பெற்ற விமானத் தாக்குதல்களினாலும் இராணுவ முகாமில் இருந்து ஏவப்படும் 'ஷெல்' களினாலும் பீதியடைந்து வெளியேறிய மக்களுள் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் ஒருவர்.

அவரும் தனது வீட்டை விட்டு வெளியேறி இருந்தார்.

இப்பகுதிகளில் இருந்து வெளியேறிய ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் அடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்திரவேலாயுத திருக்கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் வடகோவை சித்திர வேலாயுத சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் இன்று திங்கள் காலை 9-47 முதல் 11-28 வரை உள்ள நல்லோரையில் நடைபெறும்.

தேவஸ்தான பிரதம பூசகர் சிவ. சோ. சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறும்.

கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில்

# போராளிகளை விட குடிமக்களே அதிகம்பேர் பலி!

## அத்துலத்தின்வீரத்தனம்

### இதுதான் என்கிறது இந்து நாளிதழ்

"இலங்கை சம்பந்தமான கொள்கையை இந்தியா மீளாய்வு செய்ய வேண்டும்"-

இந்தத் தலைப்பில் மார்ச் 10ஆம் திகதி 'இந்து' ஆங்கில நாளிதழ் ஆசிரியர் தலையங்கம் எழுதியது.

அதன் தமிழாக்கத்தின் ஒருபகுதி இன்று பிரசுரமாறது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இனக் கொலையின் தன்மை தெரிவதாக இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பலிராம் பகத் இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் அப்பட்டமாகக் கண்டனம் செய்தார்.

அதைத் தொடர்ந்து பிரதமர் ராஜீவ் காந்தி ராஜ்யசபாவில் தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

மார்ச் முதலாம் திகதி இலங்கை அரசிடம் இருந்து விஷமத்தனமும் கெடுபிடித்தனமும் நிறைந்த பதில் இந்தியாவுக்கு வந்தது.

அப்பதிலுக்கு இந்தியா உத்தியோகரீதியில் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது.

தீவின் இனப்பிரச்சினை அதிகரித்து வருவது நமது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த கவலையை இச்சம்பவங்கள் பிரதிபலிக்கின்றன. இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இனக் கொலையின் சாயல் செயல்படுவது தெரிகிறது.

இச்செயல்கள் பதினைந்து லட்சத்துக்கதிகமான சிறுபான்மை மக்களுக்கு எதிராக பழமைவாதிகளான ஐக்கியதேசியக்கட்சியினால் தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த பகுதி என்பது உலகம் முழுவதிலும் உள்ள ஆக்க பூர்வமான அவதானிகளுக்குத் தெளிவாகப் புரிகிறது.

நாகரிக சர்வதேச பொதுசன அபிப்பிராயத்துக்கு முன்னால் அப்பட்டமான பொய் எதிர்ப்புக்களும் மறுப்புக்களும் கூட்டுமொத்தமான தகவல்திரிப்புக்களும் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளன.

இலங்கை இனப்பிரச்சினையில் இடம்பெற்று வருகின்ற மனித சோகத்தை ஆழம் காணமுற்படுவது மிகமிகக் கஷ்டமான காரியமாகும்.

குறைவே இல்லாத முறையில் மனித உயிர்கள் பலியாகிக்கொண்டிருக்கின்றன நாட்டின் பொருளாதாரமும் சீர்குலைந்து போயுள்ளது. நிதியமைச்சர் ரொனி டி மெல் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

முழு அபிவிருத்திமுயற்சிகளுடன் இராணுவச் சுமையை இனியும் எதிர்நோக்கமுடியாது என்று திரு. ரொனி டி மெல் எச்சரித்திருக்கின்றார்.

பிரிவினைப் 'பயங்கரவாத'த்தை எதிர்த்துப் போராடுகிறோம் என்ற பெயரில் முரட்டுத்தனமான தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் அரசியல் அறிவுறுத்தலின் கீழ் பாதுகாப்புப் படைகள் இந்தக் கொலை இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கின்றன.

தமிழர் மத்தியில் உள்ள பிரிவினை இயக்கத்தின் பேரால் ஆயுதப் போராட்டம் ஒன்று நடைபெறுவது உண்மை.

பல போராளிகளின் அமைப்புக்களினால் இது நடத்தப்படுகின்றது.

இந்த அமைப்புக்களுக்கும் இலங்கைத் தமிழரின் மிதவாத அரசியல் அமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையேயான உறவு அவ்வளவு திருப்தியானதாக இல்லை.

ஓரவரை ஒருவர் தூக்கி எறிந்து விட்டு நடக்கும் நிலையில் இந்த அமைப்புக்களும் கூட்டணியும் இல்லை என்பதும் உண்மை.

போராளிகளிடையே பல பிரிவுகளும் அரசியல் முதிர்ச்சியின்மை, பலவீனங்கள் உள்ளன.

இலங்கை அரசு இவற்றைப் பயன்படுத்தி பாகிஸ்தான், இஸ்ரவேல், மேற்கு நாடுகளின் கூலிப்படை ஏஜன்சிகள் போன்ற பிற்போக்குக் கூட்டாளிகளிடம் இருந்து பலவித ஆயுத, இராணுவ உதவிகளைப் பெற்று இராணுவ ரீதியில் பலத்தைப் பெருக்கி உள்ளது.

இதனால் தொழில் ரீதியாக கடுமையான பதிலடியைக் கொடுக்கக் கூடியதாக இலங்கை அரசு வந்துள்ளது.

சிறுதொகைப் போராளிகளையும் கூடுதலான குடிமக்களையும் பலிவாங்கிய 'வீரத்தனத்தை'த்தைதான் கடந்த இரண்டரை ஆண்டுகளாக திரு லலித் அத்துலத்முதலியின் வழிநடத்தலின்கீழ் காண முடிந்தது.

இந்தியாவின் மத்தியஸ்தம், தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் தொடர்பாக 'தீர்வு' ஒன்றைக் காணும் தன்மை குறித்து இந்த இரண்டரை ஆண்டுகளிலும் இலங்கை அரசு பெரிதாகச் சொல்லிச் சமாளித்துக் கொண்டது.

'இணைப்பு — சி' யின் அடிப்படையிலான தீர்வு ஒன்றுக்கு ஆதரவாக 'இந்து'வுக்கு அளித்த விளக்கமான பேட்டி ஒன்றில் திரு ஜெயவர்த்தன கூறியிருந்தார்.

பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணி சமர்ப்பித்த மாற்று யோசனைகளை ஆத்திரத்துடன் இலங்கை நிராகரித்தது.

(தொடரும்)



பொய்யாமொழி

குறள்:

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பொருள்:

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப்பெரிதாகும்.

அம்புலன்ஸ் தேவையா?

## நோயாளிகள் பெற்றோலுடன் செல்லவேண்டிய நிலை

நல்லூர், மார்ச்.17

அவசர சிகிச்சைக்காக தெல்லிப்பளை வைத்திய சாலைக்குச் செல்பவர்கள் இரண்டு லீற்றர் பெற்றோலும் கொண்டுசெல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் உள்ள 'அம்புலன்ஸ்'க்கு பெற்றோல் இல்லாததே இதற்கு காரணம்.

சமீபத்தில் மயிலிட்டியில் நடைபெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் காயமடைந்த தமது உறவினர்களை தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவர ஒருவர் முற்பட்டபோது அம்புலன்ஸுக்கு பெற்றோல் இல்லை என்று தெரிவிக்கப்பட்டதாம்.

இரண்டு லீற்றர் பெற்றோல் வாங்கி வந்தால் மட்டுமே யாழ் ஆஸ்பத்திரிக்கு போகமுடியும் என்றும் கூறப்பட்டதாம்.

அவரும் ஒரு ஏழை உழைப்பாளி. கஷ்டப்பட்டு எப்படியோ பெற்றோல் வாங்கி கொடுத்து யாழ் ஆஸ்பத்திரியில் தமது உறவினர்களை சேர்த்துவிட்டார்.

## கலாநிதி வேலுப்பிள்ளை பேருரை

யாழ்ப்பாணம், மார்ச் 17

பேராசிரியர் கலாநிதி வேலுப்பிள்ளை 'தொடக்க கால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்' என்னும் பொருள்பற்றிய தொடக்கப் பேருரையை எதிர்வரும் 19ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நிகழ்த்தவிருக்கின்றார்.

பல்கலைக் கழகங்களில் புதிதாகநியமனம் பெறும் பேராசிரியர்கள் நியமனம் பெற்ற ஆறுமாத காலத்திற்குள் தொடக்கப்பேருரை ஒன்றினை நிகழ்த்துமாறு கோருவது பல்கலைக்கழக மரபு.

இம்மரபினைப் பின்பற்றி யாழ் பல்கலைக் கழகத்திலும் 1984இல் தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்ற கலாநிதி வேலுப்பிள்ளை இம்முறை உரை நிகழ்த்துவார்.

யாழ் பெரியாஸ்பத்திரியில்

## தேவையற்ற நேரங்களில் பார்வையாளர் நிற்கக்கூடாது

### வைத்திய அத்தியட்சகர் கூறுகிறார்

நல்லூர், மார்ச்.17

தேவையற்ற நேரங்களில் வைத்தியசாலையில் பார்வையாளர்கள் நிற்கக் கூடாது.

வைத்திய அத்தியட்சகர் என். நச்சினார்க்கினியன் 'உதயன்' செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

வைத்தியசாலையில் பார்வையாளர்கள்நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் பொதுமக்கள் நடமாடித்திரிவதால் வைத்தியசாலை ஊழியர்களால் நோயாளிகளைதிருப்தியான முறையில் கவனிக்க முடிவதில்லை. எனவே பார்வையிட ஒதுக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே நோயாளர் பகுதிகளுக்குள் பார்வையாளர் செல்லவேண்டும்.

பார்வையிடும் நேரம் முடிவடைந்ததும் அவர்கள் உடனே வெளியேறி விட வேண்டும்.

இப்படி அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## மட்டக்களப்பில் மேலும் மூன்று முகாம்கள்

கொழும்பு, மார்ச் 17

மட்டக்களப்பில் ஆயித்தியமலை, வவுணதீவு, சித்தாண்டி ஆகிய இடங்களில் அதிரடிப்படை முகாம்கள் நிறுவப்பட உள்ளன.

## மரண வீட்டில் மகனை மடியில் வைத்து அழுது கொண்டிருந்தேன்

### ஹெலிக்கொப்டர் சூடு தலையை துளைத்தது

### மயிலிட்டி சம்பவம் குறித்து தாயார் சாட்சியம்

நல்லூர், மார்ச்.17

எனது மகனை மடியில் வைத்து அழுது கொண்டிருந்தபோது வானத்தில் இருந்து ஹெலிகொப்டர் சூடு விழுந்து குண்டு ஒன்று அவரது பிடரியை துளைத்துச் சென்றது.

கடந்த வியாழக்கிழமை மயிலிட்டியில் நடந்த ஹெலிக்கொப்டர் சூட்டின் போது மரணமான வேலாயுதம் விஜயகுமாரனின் (3 வயது) மரணவிசாரணை வெள்ளிக்கிழமை யாழ் ஆஸ்பத்திரியில் நடந்தது.

விசாரணையின் போது இவரது தயார் வேலாயுதம் குண்டுமணி (42 வயது) சாட்சிய[illegible] மேற்கண்டவாறு கூறினார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு க. கேச[illegible]வன் முன்னிலையில் நடைபெற்ற இவ் விசாரணையின் போது தாயார் மேலும் சொன்னதாவது

கடந்த வியாழக்கிழமை 13 ஆம் திகதி எனது வீட்டுக்குப் பக்கத்தில் வசிக்கும் இரத்தினம் மகள் சுமதி என்பவர் ஹெலிகொப்டர் சூடுபட்டு மரணமாகிவிட்டதை அறிந்து நானும் எனது பிள்ளையும் கணவருமாக இரத்தினம் வீட்டிற்கு போனோம்.

அப்பொழுது பகல் பன்னிரண்டு, அல்லது ஒரு மணியிருக்கும் சுமதியின் சடலத்தருகே இருந்து நான் அழுது கொண்டிருந்தேன்

எனது 3 வயது மகன் விஜயகுமாரன் மடியில் படுத்திருந்தான். சற்று நேரத்தால் மீண்டும் ஹெலிகொப்டர் பறந்து வரும் சத்தம் எனக்குக் கேட்டது.

திடீரென நான் அமர்ந்திருந்த வீட்டிற்கு அருகே பெரிய வெடிச்சத்தமும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டன.

அந்தச் சமயம் நான் இருந்த வீட்டுக் கதவைத் துளைத்துக் கொண்டு வந்த துப்பாக்கிச் சன்னம் எனது மகனின் பிடரியைத் தாக்கியது.

இதனால் அவரது பிடரியில் இருந்து இரத்தம் பீறிட்டோட தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றேன்.

பின்னர் யாழ் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் இறந்து விட்டதாக அறிந்தேன்.

இப்படி தாயார் தெரிவித்தார். தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது

## பண்டிதமணியின் மறைவு தமிழ்உலகுக்கு பேரிழப்பு

### மரணச் சடங்கில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 17

பண்டிதமணி ஐயாவின் மறைவு தமிழ்த்துறைக்கும், தமிழ் கூறும் நல்லுலகுக்கும் பாரிய இழப்பு.பல்கலைக்கழகமும் அறிஞர் குழாமும் ஒருங்கிணைந்து இப்பாரிய இடைவெளியை விரைவில் நிரப்ப முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே நமது கைம்மாறு ஆகும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மரணச் சடங்கில் யாழ் பல்கலைக் கழகத்தின் சார்பில் இரங்கலுரை ஆற்றிய இ. வேலுப்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

பண்டிதமணியின் மாணாக்கர் பண்டிதர் எஸ் பஞ்சாட்சரம் தலைமை வகித்தார்.

"பண்டிதமணி ஐயா பாரம்பரிய தமிழ் மரபில் வளர்ந்தவர். தனித்துவமான கருத்துக்களை உடையவர்.

பல்கலைக் கழகத்தினரின் அணுகுமுறை மேற்கத்திய கல்வி முறையைச் சார்ந்தது. இருப்பினும் கூட, பண்டிதமணியின் கருத்துக்களை பல்கலைக் கழகத்தினரால் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை இருந்தது"— இவ்வாறு பேராசிரியர் வேலுப்பிள்ளை தொடர்ந்து கூறினார்.

"குரு விசுவாசத்துடன் வாழ்ந்து காட்டி மாணவர்கள் மத்தியில் ஆரோக்கியமான மரபுகளை உருவாக்கி, நல்ல ஆசிரிய பரம்பரையைப் படைத்த பெருமை பண்டிதமணிக்கு உரியது."— என்று வித்துவான் க. சி. குலரத்தினம் கூறினார்.

"மரம்நாட்டு விழா, பனை வளர்ப்பு ஆகியவற்றில் கரிசனை கொண்ட தமிழ் முனிவர் பண்டிதமணி" என்று தொழிலதிபர் திரு க. கனகராசா பேசினார்.

"பண்டிதமணி வாழ்ந்த வீட்டை கோயிலாக அறிஞர் மனையாக வருங்காலப் பரம்பரையும் தரிசிக்கும் தலமாக அமைக்க வேண்டும்" என்று பேராசிரியர் அ. சண்முகதாஸ் கோரிக்கை விடுத்தார்.

"பண்டிதமணியின் மறைவு கந்தபுராண கலாசாரப் பாரம்பரியத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பு,சைவமக்களின் மூதுபெரும் குரவர் அவர்" என்று செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

"கல்வி வேறு, வாழ்வு வேறு என்று இல்லாத ஒன்றித்து வாழ்ந்த தமிழறிஞர் பண்டிதமணி" என்று புலவர் ம பார்வதிநாதசிவம் குறிப்பிட்டார்

குளியாப்பிட்டி நீதிபதி திரு எஸ். திவகர், விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா, 'சைவ பரிபாலன'சபைத் தலைவர் திரு நம.சிவப்பிரகாசம்' உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. வி மகாலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## அனுதாபச் செய்திகள்

யாழ்ப்பாணம், மார்ச் 17

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் மறைவுக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, நல்லைத் திருஞான சம்பந்த ஆதீன அகில இலங்கை சேக்கிழார் மன்றம், இலங்கை சுங்கத் திணைக்கள ஊழியர் சங்கம், யாழ் இலக்கிய வட்டம் ஆகியவையும் அனுதாபம் தெரிவித்துள்ளன.

நாவலர் பெருமானின் மரபு வழிச் சூழலில் வளர்ந்து அவரைப் போலவே தம் வாழ்வையும் அர்ப்பணித்து தமிழும், சைவமும் தழைத்து வளர அயராது உழைத்தவர் பண்டிதமணி என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

நாவலர் பெருமானின் சைவ, தமிழ் நெறியில் சுத்தமாக நின்று இரு கண்களையும் காத்தவர் பண்டிதமணி ஐயா என்று நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன அகில இலங்கை சேக்கிழார் மன்றம் தெரிவித்துள்ளது.

பண்டிதமணியை இழந்து தமிழன்னை கண்ணீர் வடிக்கிறாள் சைவசமயம் தவித்து நிற்கின்றது. என்று இலங்கை சுங்கத் திணைக்கள ஊழியர் சங்கம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

ஈழத்தில் மட்டுமல்லாது தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் போற்றிப் புகழத்தக்கதாக, தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டாற்றிய மூதறிஞர், இலக்கியகலாநிதி, பண்டிதமணி அவர்களின் மறைவு ஈழத்து தமிழ் உலகிற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என்று யாழ் இலக்கிய வட்டம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நாள்—திருமண வைபவங்கள்,
பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகு விழா
போன்ற மங்கல வைபவங்களைத்
தத்ரூபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

உதயன்
17 03. 1986 திங்கட்கிழமை

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

★ இனப் பிரச்சினைத் தீர்வுக்கு

# முஸ்லிம்கள் குந்தகமாக இருக்கக் கூடாது

## வடக்கு, கிழக்கு தமிழருடன் இணைந்து வாழவேண்டும்

### பதியுதீன் மஹ்மூத் கூறுகிறார்

கொழும்பு மார்ச் 17 இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முஸ்லிம்கள் குந்தகமாக இருக்கக் கூடாது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுடன் முஸ்லிம்கள் இணைந்து வாழவேண்டும்.

முன்னாள் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் மேற்கண்டவாறு சொன்னார்.

கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் நேற்று முஸ்லிம்களுக்காக குரல் எழுப்ப தனி அமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது பற்றிய பூர்வாங்கக் கூட்டம் நடைபெற்றது.

அல்ஹாஜ் டபிள்யூ எம் அமீர் தலைமை வகித்தார்.

கொழும்பு மத்தி 2 ஆவது எம்பியும் பிரதி அமைச்சருமான அல்ஹாஜ் ஜாபீர் ஏ.காதர், கொழும்பு மத்தி 3 ஆவது எம்பி ஜனாப். ஹலீம் இஷாக், ஜனாப் அலவி மௌலானா அல்ஹாஜ் மசூர் மௌலானா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் அரசாங்கத்தின் போக்கை அனைவரும் கண்டித்துப் பேசினர்.

அரச எம்பி அல்ஹாஜ் ஜாபீர் ஏ.காதர் பேச்சையில் முஸ்லிம்களுக்கு அரசு செய்யும் அநீதிகள் பற்றி விவரித்தார்.

குறிப்பிட்ட டாக்டர் பதியுதீன் மஹ்மூத் "அல்ஹாஜ் ஜாபீர் ஏ காதர் அரசைக் கண்டித்துப் பேசியுள்ளார்.

அவருக்கு என்ன நடக்குமோ தெரியாது" என்று சொன்னார்

## 15 பேர் கைது

யாழ்ப்பாணம் மார்ச் 17 மன்னாரில் நேற்று சிப்பாய்கள் 15 பேரைக் கைது செய்து கொண்டு போனார்கள். இவர்களில் அனேகமானோர் அரசாங்க ஊழியர்கள் என்று தெரியவருகிறது

## விதண்டாவாதம் [விசாரம்]

வா, தம்பி முரளி உன்னை ஒழுங்கா நான் சந்திக்கிறதில்லை எண்டு உனக்குக் கவலை.

அடிக்கடியாவது உன்னைச் சந்திக்க முடியவில்லையே எண்டு எனக்குச் சங்கடம், என்ன செய்வது?

அது சரி பலாலி, வல்வெட்டித்துறை எண்டு அடுத்தடுத்து தொடுத்து வானத் தாக்குதல் நடத்தயிச்சை நீ உதயனையும் தூக்கிக் கொண்டு ஓடி வந்தியே.

என்ன அண்ணை, உங்கடை பேப்பரிலை வானத் தாக்குதலை நிறுத்திறது பற்றி ஏதோ போசிக்கினம். உத்தரவு எண்டு எல்லாம் போட்டிருக்கிறியள் எண்டு நீ அண்டைக்கு சண்டா நிண்டா எண்டு வந்தாய்.

நானும் ஒரு மாதிரி யோசிச்சேன். எங்கடை நம்பிக்கையான நிப்போட்டர் நம்பிக்கையில்லாத பேர்வழியிட்டை அந்தச் செய்தியை எடுத்தாரோ எண்டு

ஆனால் பிறகு தான் உண்மை தெரிய வந்திது. உதயன் செய்தியிலை போட்ட மாதிரியே முடிவு எடுத்திருந்ததாம்.

வல்வெட்டித்துறை தான் பெடியளிடை பலம் மிக்க கோட்டை. முக்கியமா அங்கையும் வேறை இரண்டு மூண்டு இடங்களிலையும் ஒரு பாடம் படிப்பிச்சு விட்டுத் தான் வானத் தாக்குதலை நிறுத்த வேணும் எண்டு அச்சாணியார் நினைச்சிருக்க வேணும். அதாலை தான் இரண்டு நாள் பிந்தி வானத் தாக்குதலை நிறுத்தின தாய் அறிவித்தார் எண்டு கொழும்பிலை கதைக்கினம்.

உந்த ஒரு வார வானத் தாக்குதல் நிறுத்தமும் நிபந்தனையும் எல்லாம் வெறும் செப்படி வித்தையே தவிர வேறு எதுவுமில்லை.

அச்சாணியார் தன்ரை போர் நிறுத்தத்தை ஏதோ பெரிசா வெளுத்து வாங்கினர். அது பத்தாது எண்டு அரசாங்க 'டெயிலி நியூஸ்' அதை விசாலமாய் விளம்பரப் படுத்திச்சி பாத்தியே!

ஏதோ சமாதானத்தைக் கூடையோடு கொண்டு வந்து அவர் கொட்டப் போகிறார் எண்டதோனியிலை அவை பெரிசு படுத்தியிருக்கினம். உள்ளுக்குள்ளை பாத்தா ஒண்டுமில்லை. வெற்றுடல் தான்.

அரசாங்கப் பேப்பரிலை அதுவும் லேக்ஹவுஸ் பத்திரிகைகளிலை காலத்துக்குக் காலம் ஒவ்வொரு மந்திரிமாருக்குக் குதிரை ஓடச் சீசன் குடுக்கிறவை. அதாவது அந்தச் சீசனிலை குறிப்பிட்ட மந்திரியாருக்குத் தான் அதிக "பப்ளிசிட்டி" கிடைக்கும். அந்தப் பட்டியலிலை இப்ப அத்துலத்தார் சீசனோ என்னவோ!

கொழும்பிலை இருந்து வாற இங்கிலிஷ் பேப்பர்களை ஒழுங்காப் படிக்கிறினியே.

பகத்தின்ரை பார்லிமெண்ட் பேச்சுக்குப் பிறகு அவை எல்லாருக்கும் இப்ப இந்தியாவோடைதான் ஏத்தம்.

கொஞ்சம் நிதானமா எழுதுகிற "ஐலண்ட்" கூட இப்ப இந்திய விஷயத்திலை அரசாங்கத்தோடை தான் மருவப் பாக்குது..!

அது இருக்கட்டும். என்ன சமாதான வாரம் எண்டு சொல்லிப் போட்டு முற்றுகை, முத்தாணம் எண்டு எல்லாம் செய்து கொண்டிருக்கினம் உவை இராமண்ணைமார்?

வானத் தாக்குதலை மட்டும் நிறுத்துகிறது தான் சமாதானம் எண்டு நினைச்சினமோ.

உந்த ஒரு வார விமானத் தாக்குதல் நிறுத்தம், சமாதானம் எல்லாம் சேதமடைஞ்ச ஹெலிக்கொப்டர்களை திருத்தி முடிக்கிறதுக்காகத் தான் எண்டு கொழும்பிலை பரவலாய் பேசுகினம் அது தான் சில வேளை சரியான காரணமாயும் இருக்கக் கூடும். ஆருக்குத் தெரியும்!

**கொண்டோடி**

வயோதிப...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் அடைந்தார்.

வழியில் இடைக்காடு மடத்துக்கு சமீபமாக உள்ள வீடு ஒன்றும் பலாலிக்கு சமீபமாக உள்ள வீடு ஒன்றும் மோட்டோ ஷெல் தாக்குதலால் சேதம் அடைந்தன.

இடைக்காடு மடத்துக்கு சமீபமாக சேதம் அடைந்த வீட்டின் கூரை ஷெல் தாக்குதலால் விழுந்தது. இத் தாக்குதலின் போது வீட்டில் எவரும் இருக்கவில்லை

பலாலியில் சேதம் அடைந்த வீடு பலாலி ஐயர் என்ற ஆயுள்வேத வைத்தியருடையது

வீடு ஒன்றின் வளவுக்குள் நுழைந்த சிப்பாய்கள் நாய் ஒன்றையும் சுட்டுக் கொன்றனர்.

இச் சம்பவங்களை அடுத்து வளலாய், இடைக்காடு, பலாலி, வயாவிளான் ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் பெரும் அளவு வெளியேறினர்.

சிப்பாய்கள் மீண்டும் தொண்டமனாறு திரும்பும்போது அனர்த்தம் விளையலாம் என்ற பீதியே மக்கள் வெளியேறக் காரணம் ஆகும்.

சிப்பாய்கள் திரும்பி வரலாம் என்று எதிர்பார்த்து போராளிகள் பெரும் எண்ணிக்கையில் நேற்று காவலில் ஈடுபட்டிருக்கக் காணப்பட்டனர்.

## போராளிகள் சரணடையும்வரை அரசியல் தீர்வுக்கு இடமில்லை

### ஜனாதிபதி பேட்டி

லண்டன், மார்ச் 16 தமிழ்ப் போராளிகள் தோற்கடிக்கப்பட வேண்டும், அல்லது அவர்கள் சரணடைய வேண்டும் அதுவரை அரசியல் தீர்வு இல்லை

இப்படி இலங்கை ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன சொன்னார்.

லண்டன் 'டைம்ஸ்' நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு திட்டவட்டமாக திரு. ஜெயவர்த்தன தெரிவித்துவிட்டார்.

லண்டன் 'டைம்ஸ்' நாளிதழின் தெற்காசிய செய்தியாளர் மைக்கல் ஹாம்லினுக்கு அளித்த பேட்டியில் திரு. ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது :

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் விட்டுக் கொடுக்க முடியாத நிலை ஒன்று உருவாகியுள்ளது.

மாவட்டசபை குறித்து தமிழருடன் அரசு ஒரு இணக்கத்துக்கு வந்தது நடக்கவிருந்த தேர்தல் குழப்பப்பட்டது.

அதன்பின்னர் சமாதானத் தீர்வு காணப்பட முடியாத நிலைமை ஏற்பட்டது.

எவரும் அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வந்தாலும் அதை அமுல் நடத்த முடியாத நிலைமைதான் நிலவுகிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பை வழங்க முடியாது, கிழக்கு மாகாண மக்கள் இதை விரும்பவில்லை.

ஆகஸ்ட் 1985இல் புதுடில்லியில் வைத்து இலங்கை—இந்திய அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட நகல் திட்ட யோசனைகளின் அடிப்படையில் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

அதற்கு முன்னர் தமிழ் தீவிரவாதிகள் தோற்கடிக்கப்படவேண்டும். அல்லது அவர்கள் சரண் அடைய வேண்டும்.

அதற்கு மேலாக அரசமைப்பில் மாற்றஞ் செய்வதானால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் மாற்றத்திற்கு எதிரான தீர்ப்புத் தான் அந்த வாக்கெடுப்பில் கிடைக்கும்

ஆகவே நாம் இப்போது கொடுக்க இருப்பதற்கு மேலாக எதையும் கொடுக்க முடியாது.

இதைத் தமிழர்தான் உணரவேண்டும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன பேட்டியில் சொன்னார்.

## இந்திய....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் பிரச்சினைகளை அரசியல் ரீதியில் சமாதானமாகத் தீர்க்கும் எண்ணம் அதற்குச் சிறிதுகூட இல்லை.

இலங்கை அரசு தமிழ் இனத்தை ஒழித்துக்கட்டுவதற்கு தயார் கொண்டுள்ள இவ்வேளையில், எமது மத்திய அரசு இலங்கைத் தமிழரை கொலைக் களத்திலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அது தவறினால் போராளிகளுக்கு உதவுவதற்கு தமிழகத்திலிருந்து படை அனுப்பப் படுவது நிச்சயம் —இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிராக்டரில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

காலிலும் கையிலும் காயம் ஏற்பட்ட நிலையில் இவர் யாழ் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கேகாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மேலும் சொன்னதாவது:-

நேற்றுக் காலை பத்து மணி அளவில் வட்டக்கச்சி இராசையா கமப் பகுதியில், நெல் அறுவடை செய்துகொண்டு நின்றேன்.

என்னுடன் பெண்கள் உட்பட 15 பேர் வரையில் அங்கு நின்றனர்.

எனது தம்பியான தோமஸ் ஞானதிக்கமும் இடுத்த வயலில் நெல் அறுவடை செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது 3 ஆம் வாய்க்கால் ஊடாக ஒரு டிராக்டரில் சில இளைஞர்கள் வந்து கொண்டிருந்தனர்.

அதே நேரம் மூன்று டிராக்டர்களில் வந்த ஆயுதப்படையினர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அந்தச் சூட்டின்போது சிதறி வந்த சன்னம் ஒன்றுதான் எனது காலையும் துளைத்துச் சென்றது.

பின்னர் அங்கு நின்ற மற்றவர்களின் உதவியுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன். பின்னர் யாழ் ஆஸ்பத்திரிக்கு என்னைக் கொண்டுவந்தனர்.

எனது தம்பியான ஞானதிக்கம் அன்ரனி (23 வயது) என்பவரும் இச் சூட்டுச் சம்பவத்தினால் இறந்துவிட்டார் என்று அறிந்தேன்.

இப்படி அவர் சொன்னார்

## புலோலி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணை எழும்புங்கோ'' எனக் கூப்பிட்டார்கள்

திரு. சுந்தரேஸ்வரனும் அவரது மனைவியும் இவர்களால் தாக்கப்பட்டனர்.

அவர்களது அடகு நகை உட்பட சுமார் 3 லட்சம் பெறுமதியான நகைகள், சுமார் 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் ஆகியவை அபகரிக்கப்பட்டன.

அத்துடன் அவரது வீட்டில் இராணுவ கெடுபிடிகளுக்குப் பயந்து பாதுகாப்புக்காக வைக்கப்பட்ட பருத்தித்துறை பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த நண்பர் ஒருவரது பல உடுப்புப் பெட்டிகளும் வீட்டுப் பாவனைக்குரிய மின்சார உபகரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன.

வீட்டிலிருந்த தொலைக் காட்சிப்பெட்டி, டெக், ஆறு புதிய மின்விசிறிகள், பாவித்த உடுபுடைவை கள், புடைவைக் கடைக்கென கொள்வனவு செய்த புதிய காற்சட்டைத் துணிகள், சேலை வகைகள், வீட்டிலிருந்த மின்சாரப் பாவனைப் பொருள்கள் ஆகியவையும் கொள்ளையடிக்கப்பட்டன

இக்கொள்ளையை ஆட்சேபித்து புலோலியூர் பொதுமக்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தி மறியல் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள் நேற்று அதிகாலை முதல் இவ் வீதித் தடை அமுலுக்கு வந்துள்ளது.

புலோலியூர் பொதுமக்களால் விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் "புனித இயக்கங்களை மக்களை நசுக்கி அதில் மலர நினைக்கும் கொள்ளையர்களுக்கு முற்றுப் புள்ளி ஒன்று வைக்க மாட்டீர்களா?" எனவும் "எங்கள் போராட்டம் வெற்றியடைய மக்கள் ஆதரவு தேவை'' எனவும் "மக்கள் போராட்டம் மாபெரும் போராட்டம் இதற்கு ஒரு முடிவு வரும் வரை போராட்டம் தொடரும்'' எனவும் எழுதப்பட்டுள்ளது.

பருத்தித்துறை யாழ்ப்பாண பிரதான வீதியில் மந்திகைச் சந்திக்கருகாமையிலும்—

பருத்தித்துறை–கொடிகாமம் வீதி, பருத்தித்துறை–சாவகச்சேரி வீதி, பருத்தித்துறை – மருதங்கேணி வீதி, பருத்தித்துறை – அல்வாய் வீதி ஆகியவற்றிலும் வீதித் தடைகளை ஏற்படுத்தி பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

இதனால் பருத்தித்துறை, புலோலி, தும்பளை, சுந்தோளம், மருதடி ஆகிய பகுதிகளுக்கான சகல போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டிருந்தன.

## விளையாட்டரங்கு

# ஜொலி. அணி வெற்றி!

## திணற அடித்த வீரர் விஜயன்

### நிலைதடுமாறிச் சரிந்த ஜொனியன்ஸ்

— விளையாட்டுச் செய்தியாளர் சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், மார்ச் 17 யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி 5 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

இந்த ஆட்டம் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் அடிப்படையில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஜொலி ஸ்ரார்ஸ் அணி வீரர் ஆர். விஜயகுமாரின் அபார துடுப்பாட்டம் இந்த அணியின் வெற்றிக்கு வழிகோலியது.

ஜொனியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஒதுக்கப்பட்ட 40 ஓவர்கள் துடுப்பெடுத்தாட முடியாமல் நிலைதடுமாறி 37.5 ஓவர்களில் 160 ஓட்டங்களைப் பெற்று சரிந்தது ஜொனியன்ஸ்.

ஜி. பி ஜெயவீரசிங்கம் 5 பவுண்டரிகள் 3 சிக்சர்கள் அடங்கிய 52 ஓட்டங்களையும் ஆர். ரி. தேவபாலன், சி. சூரியகுமார் ஆகியோர் முறையே 33, 20 ஓட்டங்களையும் பெற்றனர்

சிறப்பாக பந்து வீசிய எஸ். ரவிக்குமார் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ஆர். விஜயகுமார், எஸ். பி எஸ்.இளங்கோ ஆகியோர் 37, 21 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்டுக்களையும் எஸ் சுரேஷ், வை. ஜெயந்தன் ஆகியோர் முறையே 16, 17 ஓட்டங்களுக்கு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்

வெற்றிபெறுவதற்கு 161 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது ஜொலி ஸ்ரார்ஸ் அணி.

ஜொலி ஸ்ரார்ஸ் அணி 34.3 ஓவர்களில் குறிப்பிட்ட ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

பந்து வீச்சாளர்களை திணறடித்த ஆர் விஜயகுமார் 8 பவுண்டரிகளும் 5 சிக்சர்களும் அடங்கிய 74 ஓட்டங்களை விளாசியடித்தார்.

இவருடன் இணைந்தாடிய எஸ். ரவிகுமார் 38 ஓட்டங்களையும் பி. பிரபானந்தன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்

ஏ வாகீசன், சி. சூரியகுமார் ஆகியோர் முறையே 14, 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் எஸ். டி. குலநாதன் 30 ஓட்டங்களை கொடுத்து 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

திரண்ட ரசிகர்களின் மத்தியில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டிக்கு திரு. கே. பூபாலசிங்கம், சி. நந்தகுமார் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## சுன்னாகம் ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச்.17 நேற்று முன்தினம் நடைபெற்ற மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி வெற்றி பெற்றது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியை ஸ்கந்தவரோதயா அணி 2விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

நேற்று முன் தினம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 38·3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயா அணி வெற்றிக்கு தேவையான 130 ஓட்டங்களை 8 விக்கெட்டுக்களை இழந்து 44.4 ஓவர்களில் பெற்றது

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக எஸ். விமலதாசன், என் எஸ் சிவஞானசேகரம் ஆகியோர் கடமையாற்றினர்.

## பொற்பதி வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச்.17 நேற்று முன்தினம் நடைபெற்ற உதைபந்தாட்ட அரை இறுதிப் போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம் முஸ்லிம் விளையாட்டுக் கழக அணியை பொற்பதி விளையாட்டுக்கழக அணி 2க்கு 0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் 9 பேர் கொண்ட — "நொக் அவுட்" முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் ஓர் அங்கமாகவே இப்போட்டி நடைபெற்றது.

இதன்மூலம் பொற்பதி அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

ஆட்டம் ஆரம்பமாகி 5 நிமிடத்தில் 1 கோலைப் போட்ட பொற்பதி அணி திறமையாக ஆடியது.

முஸ்லிம் அணி சிறப்பாக ஆடிய போதிலும் பொற்பதி அணியின் கோல்காப்பாளர் எஸ் இராஜ்குமாரின் அபார பந்து தடுப்பினால் அவர்களால் கோல் போட முடியவில்லை

ஆட்ட நேர முடிவின் போது பொற்பதி அணி இரண்டாவது கோலைப் போட்டு வெற்றியை உறுதி செய்தது.

பொற்பதி அணியின் சார்பில் இரு கோல்களையும் எஸ் சதீஸ்குமார் போட்டார்.

இந்தப் போட்டிக்கு எஸ்.எம் மாட்டின் நடுவராகக் கடமையாற்றினார்.

## வவுனியாவில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர்.

கோவிந்தன் செல்வத்துக்கு நெஞ்சில் ஏற்பட்ட சூட்டினால் நுரையீரல் வெளியேறி இருந்தது லோகேஸ்வரனுக்கு வயிற்றில் ஏற்பட்ட சூட்டில் குடல் வெளியேறி இருந்தது.

## அமைச்ச..

தெரிகின்றது.

கிராம அபிவிருத்தித் துறை அமைச்சரான திருமதி விமலா கன்னங்கராவுக்கு மேலதிகமான பொறுப்புக்களும் வழங்கப்படலாம்.

உயர்கல்வி அமைச்சர் பதவியும் வேறு ஒருவருக்கு வழங்கப்படக் கூடும் என்றும் சொல்லப் படுகின்றது

அமைச்சுக்கள் தான் மாற்றப்படும்; ஆட்கள் மாற்றப்படமாட்டார்கள் — இப்படி அரச வட்டாரங்கள் கூறின.

## மக்கள் வங்கி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகம் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவினரே தங்கள் பகுதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளை முன்பாக மக்களைச் சேர்த்து போராட்டம் நடத்துவார்கள்.

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

● கொழும்பு சென்று அடகு நகைகளை எடுக்க வங்கிகளுக்கு கடிதம் கொடுத்தவர்கள் அதனை வாபஸ் பெற்று தமது பயணத்தை ரத்துச் செய்ய வேண்டும்.

● பாதுகாப்புப் பிரச்சினை உள்ள பகுதிகளில் இருக்கும் மக்கள் வங்கிக் கிளைகளில் மறியல் போராட்டம் நடத்துவோர் மேலதிக பூட்டுக்களை போட்டு வங்கி முகாமையாளரையும், ஊழியர்களையும் உள்ளே செல்லவிடாது தடுக்க வேண்டும்

● இத்தனை தடைகளையும் தாண்டி வங்கி திறக்கப்பட்டால் மேல் நடவடிக்கை உடனடியாக தீர்மானிக்கப்படும்.

● எமதுபகுதிக்கு தற்பொழுது உதவி வழங்கிக் கொண்டிருக்கும் கனேடிய தூதரகத்துக்கும் இதுசம்பந்தமான மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப் படவேண்டும்.

● இதுவரை பணம் செலுத்தாத வாடிக்கையாளர்கள், சங்கம் மறு அறிவித்தல் விடுக்கும் வரை வங்கிக்கு பணம் செலுத்தக் கூடாது.

● பாதிக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளர்களின் பூரண ஒத்துழைப்புடன் விரிவுபடுத்தப்பட்ட ஒரு மறியல் போராட்டத்தின் மூலம் நகைகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தமிழ் உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 17-03-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ/60/N/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org